பொருளாதார, சமூக, நலன்புரிச் செலவுகள்

பொதுவான போக்குகள்

சாதகமான வானிலைத் தன்மைகளைத் தொடர்ந்து அதிகரித்த நீர் மின்வலு உருவாக்கமும், உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக வலுவுக்கான மட்டுப் படுத்தப்பட்ட கேள்வியுமே 1989 இல் உள்நாட்டு வலுத்துறை அபிவிருத்தியில் காணப்பட்ட முக்கிய பண்புகளாகும். இவ்விரண்டும் இணைந்து பெற்றோலிய உற்பத்திகளின் பாவனையைக் கணிசமானளவில் குறைத்ததன் மூலம் சென்மதி நிலுவையின் மீதான பளு இலகுவாக்கப்பட்டது. தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்கள், ஊர்த்தி தொகுதியின் எண்ணிக்கை குறைக்கப்பட்ட நிலை, ஊர்தி களினதும் உதிரிப்பாகங்களினதும் அதிகரித்த விலை என்பன காரணமாகப் போக்குவரத்துத்துறை கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. அஞ்சல், தொலைத்தொடர்புப் பணிகளும் உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகப் பாதிக்கப்பட்டன. சமூக நலன்புரிச் செலவுகளில் வீடமைப்பு, நலத்துறை, கல்வி போன்ற பெரும்பாலான எல்லா நடவடிக்கைகளும் 1989 இல் மெதுவான முன்னேற்றத்தையே காட்டின.

வலு

1989 இன் பெரும்பாலான பாகங்களில் நிலவிய சாதகமான வானிலைத் தன்மைகள் உள்நாட்டு வலுத்துறையில் சாதகமான தாக்கத்தைக் கொண் டிருந்தன. நீர்த்தேக்கங்களின் உயர்ந்த நீர் மட்டங்கள் நீர் மின்வலு உருவாக்கத் தினை மிகைப்படுத்தின. மறுபுறத்தில் நாட்டில் காணப்பட்ட அமைதியின்மையின் காரணமாக மின்வலுவுக்கான கேள்வியும் வீழ்ச்சியடைந்தது. கேள்வி, நிரம்பல் இரண்டிலும் காணப்பட்ட இவ்வபிவிருத்திகள், நாட்டின் வலுக்கேள்வியின் முக்கிய பாகத்தை நீர் மின்வலுவின் மூலம் வழங்குவதற்கு இலங்கை மின் சபைக்கு இயலச் செய்து, வெப்பவலு உருவாக்கத்தினை ஆகக் குறைந்த மட்டத்திற்குக் கொண்டு வந்தன. பன்னாட்டுச் சந்தைகளில் காணப்பட்ட அதி உயர்ந்த எண்ணெய் விலைகளும், உள்நாட்டுச் சந்தையில் கூடியளவிலான விலைச் சீராக்கங்களும் இவ்வாண்டில் பெற்றோலிய உற்பத்திகளுக்கான கேள்வியைக் கணிசமாகக் குறை வடையச் செய்தன.

விறகு, வேளாண்மை எச்சங்கள், விலங்குக் கழிவுகள் என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தகமல்லா வலு மூலங்களுடன் இணைந்து ஏனைய மரக்கூறுகள் தொடர்ந்து 1989 இலும் இலங்கையின் முக்கிய வலுமூலங்களாக விளங்கின. 47 இலட்சம் தொன் எண்ணெய்க்குச் சமமானதென மதிப்பிடப் பட்டுள்ள இம்மூலங்கள் நாட்டின் மொத்த வலு நிரம்பலில் 70 சதவீதத்தைக் கொண்டிருந்தவேளையில் பெற்றோலியம், மின்வலு, திரவப் பெற்றோலிய வாயு, சிறு தொகை நிலக்கரி, இலிக்னயிட் என்பன மிகுதிக்கு வகை கூறின.

1989 இறுதியில் மின்வலு உருவாக்கத்தின் நிறுவப்பட்ட மொத்த இயலளவு 1,240 மெகாவாட்டில் மாறாது காணப்பட்டதுடன் நீர் அடிப்படையிலான 968 மெகாவாட்டுகளையும் வெப்ப அடிப்படையிலான 272 மெகாவாட்டுக்களை யும் உள்ளடக்கியிருந்தது. எனினும் 1989 இல் செப்பனிடலுக்காகக் களனி திஸ்ஸ வெப்ப மின்வலு நிலையம் (50 மெகவாட்) மூடப்பட்டிருத்த வேளையில் மின்வலு உருவாக்கத்தின் பயன்தரு மொத்த இயலளவு 1,230 மெகாவாட்டுக் களாகக் காணப்பட்டது.

அட்டவணை 1.25

வலுத்துறையின் அடிப்படைப் பண்புகள் 1988 – 1989

விடயம்	அலகு	1988	1987க்கு மேலாக சதவீத மாற்றம்	1989 *	1988க்கு மேலாக சதவீத மாற்றம்
1. பெற்றோலிய உற்பத்திகள்					
1.1 வற்றுமதிகள் ...	ரூ. ப. இ.	2,265.4	— 12.6	2,241.9	— 1.0
	சிஎஉ ப.இ.	53.0	— 22.1	48.6	— 8.3
1.2 இறக்குமதிகள் ...	ரூ. ப. இ.	7,839.2	— 10.1	8,376,2	6.9
	சிஎஉ ப.இ.	183.3	— 19.9	181.3	— 1.1
1.3 இறக்குமதி செய்யப்பட்ட தொகை					
1.3.1 மசகெண்ணெய் ...	மெ. தொ.	1,894,135	6.5	1,275,059	— 32.7
1.3.2 சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் ...	,,	143,079	— 43.2	374,344	161.6
1.3.3 வனைய உற்பத்திகள் ...	,,	26,688	3.7	17.150	— 35.7
1.4 மசகெண்ணெயின் சராசரி விலை...	ரூ./பீ. ஒ.	484.33	— 10.9	628.31	29.7
	ஐ.அ.டொ./ பீ. ஒ.	16.45	— 10 8	17.43	6.0
1.5 உள்நாட்டு விற்பனைகள்					
1.5.1 சிறப்புப் பெற்றோல் ...	மெ. தொ.	158,288	12.7	172,864	9.2
1.5.2 தன்னியக்க டீசல் ..	,,	500,248	0.6	482,178	— 3.6
1.5.3 பார டீசல் ...	,,	49,503	— 62.4	22,734	— 54.1
1.5.4 சிறப்பு டீசல் ...	,,	19,303	— 6.1	16,585	— 14.1
1.5.5 மண்ணெண்ணெய் ...	,,	167,983	8.0	150,988	— 10.1
1.5.6 உலைஎண்ணெய் ...	,,	163,606	1.2	160,033	— 2.2
1.6 உளநாட்டு விலை					
1.6.1 சிறப்புப் பெற்றோல் ...	ரூ./லிற்றர்	13.50	—	20.00	48.1
1.6.2 தன்னியக்க டீசல் ...	,,	8.13	—	9.60	18.1
1.6.3 பார டீசல் ...	,,	7.83	—	9.20	17.5
1.6.4 சிறப்பு டீசல் ...	,,	9.28	—	10.90	17.5
1.6.5 மண்ணெண்ணெய் ...	,,	6.58	—	6.58	—
1.6.6 உலை எண்ணெய்					
500 செக்கண்ட் ...	,,	4.22	—	5.00	18.5
800 செக்கண்ட் ...	,,	3.87	—	4.70	21.4
1000 செக்கண்ட் ...	,,	3.72	—	4.55	22.3
1.6.7 நிலக்கீல் ...	ரூ./கி.இ.	7.22	—	8.45	17.0
2. மின் வலு					
2.1 நிறுவப்பட்ட இயலளவு ...	மெ. வா.	1,208.45	6.2	1,240.65	2.7
2.1.1 நீர் மின் ...	,,	938.45	8.1	968.45	3.2
2.1.2 வெப்ப மின் ..	,,	270.00	—	272.20	0.8
2.2 உற்பத்தி செய்யபபட்ட அளகுகள்	ப.இ.கி.வா.ம.	2.799.5	3.4	2,858.0	2.1
2.2.1 நீர் மின்	,,	2 597.7	19.3	2,802.0	7.9
2.2.2 வெப்ப மின் ..	,,	201.8	— 61.9	56.0	— 72.2
2.3 மொத்த விற்பனைகள் ..	ப.இ.கி.வா.ப	2,371.0	5.2	2,358.0	— 0.5
2.3.1 வீடு ..	,,	405.0	5.9	415.0	2.5
2.3.2 கைத்தொழில் ..	,,	905.0	4.6	872.0	— 3.6
2.3.3 வர்த்தகம் ..	,,	443.0	5.8	420.0	5.2
2.3.4 உள்ளூராட்சி மன்றங்கள் ..	,,	601.0	5.3	634.0	5.5
2.3.5 தெரு விளக்கு ...	,,	17.0	— 11.8	17.0	—

* தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மின்சபை

1989 இல் இலங்கை மின்சபையினால் உருவாக்கப்பட்ட மொத்த வலுவான 28,580 இலட்சம் கி. வா. மணித்தியாலங்கள் 1988 இல் உருவாக்கப்பட்ட 27,990 இலட்சம் கி. வா. மணித்தியாலங்களை விட 2 சதவீதம் அதிகமானதாகும். நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் உயர்வடைந்ததைத் தொடர்ந்து நீர்வலுப் பொறிகள் முழு அளவில் இயங்கக் கூடியதாகக் காணப்பட்டன. இதன் விளைவாக நீர்வலு மூலங்களிலிருந்து உருவாக்கப்பட்ட மின்வலுவின் சார்புப் பங்கு 1988 இன் 93 சத வீதத்திலிருந்து 1989 இல் 98 சதவீதத்திற்கு அதிகரித்தது. வர்த்தக வலு

யில் நீர்மின் அடிப்படையிலான வலுவின் பங்கு 1988 இன் 44 சதவீதத்திலிருந்து 1989இல் 47சதவீதத்திற்கு அதிகரித்தமையிலும் இது பிரதிபலித்தது. இதற்கேற்ப வெப்ப மின்வலு உருவாக்கம் 1988 இன் 2,020 இலட்சம் கி.வா. மணித்தியாலங்களிலிருந்து 1989 இல் 560 இலட்சம் கி.வா. மணித்தியாலங்களுக்குக் கணிசமான ளவில் வீழ்ச்சியடைந்து மின்வலு உருவாக்கத்திற்கான மொத்தச் செலவைக் குறைவடையச் செய்தது. இதேவேளையில் உருவாக்கத்திலும் அனுப்பலிலுமான இழப்புக்கள் 1988 இன் 16 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தினால் அல்லது 5,000 இலட்சம் கி.வா. மணித்தியாலங்களினால் அதிகரித்தன. இது பெரும்பாலும் 1989 யூனிலிருந்து ஒத்தோபர் வரையிலான காலப்பகுதியில் விரிவடைந்த உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக மின்மாற்றுப் பொறிகளுக்கும் மின்அனுப்பல் வழிகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட சேதம் காரணமாக ஏற்பட்டதாகும்.

1988 இன் 23,710 இலட்சம் கி. வா. மணித்தியாலங்களுடன் ஒப்பிடுகையில் 1989 இல் மின்வலுவின் மொத்த விற்பனை 23,58 இலட்சம் கி. வா. மணித்தியாலங்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வர்த்தகத்திற்கும் கைத்தொழில் நடவடிக்கைகளுக்குமான விற்பனைகள் முறையே 6 சதவீதத்தினாலும், 4 சதவீதத்தினாலும் 4,200 இலட்சம் கி. வா. மணித்தியாலங்களுக்கும் 8,720 இலட்சம் கி. வா. மணித்தியாலங்களுக்கும் வீழ்ச்சியடைந்தன. இதேவேளையில் வீட்டுத்துறைக்கான விற்பனைகளும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட தொகை வடிவிலான விற்பனைகளும் முறையே 2 சதவீதத்தினாலும் 5 சதவீதத்தினாலும் 4,150 இலட்சம் கி. வா. மணித்தியாலங்களுக்கும் 6,340 இலட்சம் கி. வா. மணித்தியாலங்களுக்கும் அதிகரித்தன.

1989 ஒகத்து 1 ஆம் நாள் முதல் எரிபொருள் சீராக்கக் கட்டணம் நீக்கப்பட்ட போதிலும் மின்வலுத் தீர்வை அமைப்பு ஆண்டு முழுவதிலும் மாறாது காணப்பட்டது. தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்கள் இலங்கை மின்சபையின் வருவாயிலும் மூலதன உள்ளமைப்பிலும் கடுமையான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. 1989 இல் இலங்கை மின்சபையின் மூலதன, வருவாய் இழப்புக்கள் முறையே ரூ. 390 இலட்சமாகவும், ரூ. 750 இலட்சமாகவும் காணப்பட்டன.

வலு உருவாக்கத்திற்கான பாரஉசலின் குறைவான நுகர்வும், உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாகப் பொதுவாகப் பெற்றோலிய உற்பத்திப் பொருட்களுக்கான குறைவான கேள்வியும் பெற்றோலிய உற்பத்திக்கான நுகர்வில் கணிசமான வீழ்ச்சியை ஏற்படுத்தி 1989 இல் பெற்றோலிய இறக்குமதிக்கான வெளிநாட்டுச் செலாவணிச் செலவைக் கணிசமானளவில் குறைப்பதற்கு உதவின. கி.எ.உ. நியதிகளில் 1988 இல் 11 சதவீதத்திற்கு வகைகூறிய பெற்றோலிய இறக்குமதிகளின் மொத்தச் செலவு 10 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது (சிஎஉ 1,810 இலட்சம்). இதேபோன்று 1989 இல் மசகெண்ணெய் இறக்குமதியின் மொத்த அளவும் 33 சதவீதத்தினால் 1,273,059 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. 1989 யூலை 15 முதல் 1989 செத்தெம்பர் 15 வரை பெற்றோலியத்தூய்மி மூடப்பட்டிருந்தமை இதற்கானதொரு மேலதிக காரணமாக விளங்கியது. மாறாக, தூய்மையாக்கப்பட்ட உற்பத்திகளின் இறக்குமதி 1988 இன் 143,079 மெற்றிக் தொன்களிலிருந்து 1989 இல் 374,444 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தது.

அட்டவணை 1.26

பெற்றோலிய உற்பத்திகளின் திருத்தப்பட்ட விலைகள்

(இலீற்றர் ஒன்று ரூபாய்)

உற்பத்திகள்	பழைய விலை	திருத்தப்பட்ட விலை	
	(ரூ. ச.)	19.4.89 (ரூ. ச.)	24.9.89 (ரூ. ச.)
1. பெற்றோல்	13.50	16.00	20.00
2. சிறப்பு டீசல்	9.28	9.70	10.90
3. தன்னியக்க டீசல்	8.13	8.55	9.60
4. பரா டீசல்	7.83	8.25	9.20
5. மண்ணெண்ணெய்	6.58	6.58	6.58
6. உலை எண்ணெய் 250 பீரிவு	4.96	5.29	5.79
7. ,, ,, 500 ,, ...	4.22	4.55	5.00
8. ,, ,, 800 ,, ...	3.87	4.20	4.70
9. ,, ,, 1000 ,, ...	3.72	4.05	4.55
10. ,, ,, 1500 ,, ...	3.46	3.79	4.29
11. ,, ,, 2000 ,, ...	3.32	3.65	4.15
12. ,, ,, 3900 ,, ...	3.00	3.33	4.20
13. பிற்றுமன்	7.22	7.55	8.45

மூலம்: இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

பெற்றோலிய உற்பத்திப் பொருட்களின் சில்லறை விற்பனை விலைகள் இவ்வாண்டில் இருமுறை மீளாய்வு செய்யப்பட்டன. முதலில் 1989 ஏப்பிறல் 19 இலும் இரண்டாவதாகச் செத்தெம்பர் 29 இலும் இவை நிகழ்ந்தன. இதற்கான முக்கிய காரணம் பன்னாட்டுச் சந்தையில் பெற்றோலிய விலைகளின் மேல் நோக்கிய அசைவும் செலாவணி வீத வீழ்ச்சியுமாகும். ஆகக்கூடிய அதிகரிப்பு பெற்றோலுக்கானதாகக் காணப்பட்டது (48 சதவீதம்). இவ்வாண்டில் மண்ணெண்ணெயின் விலை மாறாது காணப்பட்டபோதும் பெற்றோலிய உற்பத்திகளுக்கான சில்லறை விற்பனை விலைகளின் சராசரி அதிகரிப்பு கிட்டத்தட்ட 18 சதவீதமாகக் காணப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட வீதங்களின் விபரங்கள் அட்டவணை 1.26 இல் தரப்பட்டுள்ளன. மசகெண்ணெயின் சராசரி இறக்குமதி விலை 1988இன் பீப்பாய் ஒன்றுக்கான ஐக்கிய அமெரிக்க டொலர் 16.45 (ரூ. 484) இலிருந்து 1989 இல் பீப்பாய் ஒன்றுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 17.43 இற்கு (ரூ. 628) 6 சதவீதத்தினால் அதிகரித்தது.

1989 இல் பெற்றோலிய உற்பத்திகளின் உள்நாட்டு நுகர்வு 1988 இன் 1,058,931 மெற்றிக் தொன்களிலிருந்து 1,005,382 மெற்றிக் தொன்களுக்கு 5 சதவீத வீழ்ச்சியொன்றினைப் பதிவு செய்தது. நாட்டில் தொடர்ச்சியாகக் காணப்பட்ட அமைதியின்மையும் வெப்ப மின்வலு உருவாக்கத்தில் பாரடீசல் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமையும் இதற்கான பெருமளவு காரணங்களாக விளங்கின. கணிசமான வீழ்ச்சிகள் பாரடீசல் (64 சதவீதம்), சிறப்பு டீசல் (14 சதவீதம்), உலையெண்ணெய் (9 சதவீதம்) என்பனவற்றில் பதிவு செய்யப்பட்டன. 1989 இல் மண்ணெண்ணெயினதும், தன்னியக்க டீசலினதும் நுகர்வும் முறையே 2 சதவீதத்தினாலும் 4 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. தனியார் உந்து ஊர்திகளினதும் உந்து ஈருருளிகளினதும் பெருமளவு இறக்குமதி

காரணமாகச் சிறப்புப் பெற்றோலின் நுகர்வு 1988 இனைவிட 9 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. அதேவேளை திரவப் பெற்றோலிய வாயுவின் நுகர்வு 1989 இல் 23 சதவீதத்தினால் அதிகரித்து 29,505 மெற்றிக் தொன்களாக விளங்கியது.

பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் 1988 இன் 688,248 மெற்றிக் தொன்களிலிருந்து 1989 இல் 480,731 மெற்றிக் தொன்களுக்கு 30 சதவீதத் தினால் வீழ்ச்சியடைந்தன. இதேபோன்று பெற்றோலிய ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்களும் 1988 இன் ரூ. 22,650 இலட்சத்திலிருந்து (சிஎஉ 530 இலட்சம்) 1989 இல் ரூ. 22,420 இலட்சத்திற்கு (சிஎஉ 490 இலட்சம்) 1 சதவீதத்தினால் (சிஎஉ நியதிகளில் 8 சதவீதம்) வீழ்ச்சியடைந்தன.

போக்குவரத்து

1989 இல் போக்குவரத்துத்துறையின் தொழிற்பாடுகள் மோசமாகப் பாதிக் கப்பட்டன. உள்நாட்டுக் குழப்பங்களின்போது ஊர்தித் தொகுதிக்கு ஏற்படுத்தப் பட்ட சேதம் காரணமாக இலங்கைப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகளின் நடவடிக்கைகள் அதிகளவில் மட்டுப்படுத்தப்பட்டன. குறிப்பாக 1989 யூன், யூலை காலப்பகுதியில் இலங்கை பிரதேசப் போக்குவரத்துச் சபை ஊழியர்களி னால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தங்கள் இந்த நிலைமையை மேலும் மோசமடையச் செய்தன. உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக இலங் கைப் புகைவண்டிப் பகுதியின் பயணிகள் பணிகளும், பொருள் கொண்டு செல்லல் பணிகளும் குறைக்கப்பட்டன. இதே வேளையில் உள்நாட்டுக் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட தனியார்துறையும் ஊர்திகளினதும் உதிரிப்பாகங்களினதும் அதி கரித்த இறக்குமதிச் செலவு காரணமாகத் தனது தொழிற்பாடுகளை விரிவாக்க இயலாது காணப்பட்டது.

இலங்கைப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகளின் தொழிற்பாட்டு அளவும் 1989 இல் அதிகளவில் வீழ்ச்சியடைந்தது. 1989 இல் தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர்கள் 22 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து, 2,610 இலட்சமாக விளங்கின. தொழிற்படுத்தப்பட்ட கிலோமீற்றர்களின் வீழ்ச்சிக்கு, உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அட்டவணை யிடப்பட்ட பணிகளில் இடைக்கிடை ஏற்பட்ட தடங்கலும் ஊர்தித் தொகுதியின் குறைப்புக் காரணமாகத் தொழிற்பாட்டு வேகம் குறைக்கப்பட்டமையும் பெரு மளவு காரணமாக அமைந்தன. ஏற்கெனவேயுள்ள ஊர்தித் தொகுதியான 7,097 உடன் இவ்வாண்டில் 212 புதிய ஊர்திகள் சேர்க்கப்பட்டபோதும் ஊர்தித் தொகுதிக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவையும் சேதத்தையும் கருத்திற்கொள்ளும் போது இது ஊர்தித் தொகுதியினைத் தேவையான அளவு மேம்படுத்துவதற்குப் போதுமானதாகக் காணப்படவில்லை. உள்நாட்டுக் குழப்பங்களின்போது மொத்த மாக 376 பேருந்துகள் முழுமையாகவோ பகுதியாகவோ சேதமாக்கப்பட்டு இலங்கைப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகளுக்கு, மதிப்பிடப்பட்ட ரூ. 3,220 இலட்ச மூலதன இழப்பை ஏற்படுத்தின.

மேலும் ஊர்தித் தொகுதியின் வழமையான பேணல் தேவைகளை ஈடு செய்வதற்கான உதிரிப்பாகங்களுக்குக் கடுமையான பற்றாக்குறை காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாளொன்றுக்கான அட்டவணையிடப்பட்ட தேவையாகிய 6,038 பேருந்துகளுக்கெதிராக நாளொன்றுக்குத் தொழிற்படுத்தப்பட்ட பேருந்து

களின் சராசரி எண்ணிக்கை கிட்டத்தட்ட 3,874 ஆகக் காணப்பட்டது. இதே வேளையில் 1989 யூன், யூலையில் வேலை நிறுத்தம் காரணமாக இலங்கைப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகளின் தொழிற்பாடுகளும் கடுமையாகத் தடைப் பட்டன. இதன் விளைவாக பயணிகள் கிலோமீற்றர்கள் முன்னைய ஆண்டினை விட 16 சதவீதத்தினால் 129,800 இலட்சம் கிலோமீற்றர்களுக்கு வீழ்ச்சி யடைந்தன. இதனைத் தொடர்ந்து இலங்கைப் பிரதேசப் போக்குவரத்துச் சபைகளின் வருவாய்கள் 1989 இல் 11 சதவீதத்தினால் ரூ. 22,420 இலட்சத் திற்கு வீழ்ச்சியடைந்தன. இதேவேளையில் 1989 இல் ஏழு பிரதேசப் போக்கு வரத்துச் சபைகள் கணிசமான வருவாய் இழப்புக்களை அறிவித்தன. உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக இலங்கைப் பிரதேச போக்குவரத்துச் சபைகளுக்கான மொத்த இழப்பு ரூ. 4,000 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை 1.27

போக்குவரத்துத் துறையின் அடிப்படைப் பண்புகள் 1988 – 1989

விடயம்	அலகு	1988	1987 இற்கு மேலாக சதவீத மாற்றம்	1989*	1988இற்கு மேலாக சதவீத மாற்றம்
1. உந்து ஊர்திகளின் புதிய பதிவுகள் .	ண்ணிக்கை கள்				
1.1 இ. . போ. சபையின் பேருந்துகள் ..	,,	245	188.2	260	6.1
1.2 தனியார் சொகுசு வண்டிகள் ..	,,	863	– 25.0	441	– 48.6
1.3 தனியார் ஊர்திகள் ..	,,	8,031	4.4	8,772	9.2
1.4 இரட்டை நோக்கங்களுக்கான வண்டிகள்	,,	3.002	– 7.2	2,771	– 7.7
1.5 உந்துருளிகள் .	,,	27,837	– 4.1	66,696	140.0
1.6 சரக்குகள் கொண்டு செல்வதற்கான வண்டிகள் ..	,,	2.504	– 13.7	3,149	25.8
1.7 நில் வண்டிகள் ..	,,	2,342	– 14.1	2,457	4.9
1.8 எனைபவைகள் ..	,,	1	– 98.6	14	1,300
2. இலங்கை போக்குவரத்துச் சபை					
2.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ..	ப. இ.	333.6	– 10.1	261.3	– 21.7
2.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ..	,,	15,413.2	– 3.5	12,980.0	– 15.8
2.3 மொத்த வருவாய் ..	ரூ. ப. இ.	2,510.2	– 0.9	2,242.4	– 10.7
2.4 மொத்தச் செலவு ..	,,	3,032.9	7.7	வி.இ.	வி.இ.
2.5 மிகை/குறை (+/—) ..	,,	– 510.5	81.1	வி.இ.	வி.இ.
3. இலங்கை புகைவண்டிப் பகுதி					
3.1 தொழிற்பட்ட கிலோ மீற்றர்கள் ..	ப. இ.	6.6	– 19.5	6.6	—
3.2 பயணிகள் கிலோ மீற்றர்கள் ..	,,	1,859.1	– 9.7	1,677.0	– 9.8
3.3 சரக்கு தொன் கிலோ மீற்றர்கள் ..	,,	197.5	1.2	177.5	– 10.1
3.4 மொத்த வருவாய் ..	ரூ. ப. இ.	464.0	– 4.7	392.0	– 15.5
3.5 மொத்தச் செலவு ..	,,	863.0	3.5	795.0	– 7.8
3.6 மிகை/குறை (+/—) ..	,,	– 399.0	14.7	— 403.0	1.0

* தற்காலிகமானவை.

மூலங்கள்: இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை,
இலங்கை புகைவண்டிப் பகுதி,
உந்து ஊர்திகள் திணைக்களம்.

ஏனைய முறைகளிலான போக்குவரத்து நடவடிக்கைகளுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய ஆண்டில் இலங்கைப் புகைவண்டிப் பகுதி சிறப்பாகச் செயலாற்றி யுள்ளது. அமைதியின்மையும், குழப்பமும் நிலவிய நாட்களில்கூட நாட்டின் தேவைகளைப் பேணும் பொருட்டு இன்றியமையா பயணிகள் பணிகளையும், பொருட்கொண்டு செல்லும் பணிகளையும் புகைவண்டிப் பகுதி தொழிற்படுத்தி யது. இதன் விளைவாக இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பட்ட கிலோமீற்றர்கள் 1989 இல் 66 இலட்சம் கிலோமீற்றர்களாக மாறாது காணப்

பட்டன. இதேவேளையில் இவ்வாண்டில் பயணிகள் கிலோமீற்றர்களும் பொருள் கொண்டு செல்லல் கிலோமீற்றர்களும் ஒவ்வொன்றும் முறையே 10 சதவீதத் தினால் 16,770 இலட்சம் கிலோமீற்றர்களுக்கும் 1,780 இலட்சம் கிலோ மீற்றர்களுக்கும் வீழ்ச்சியடைந்தன. இந்தத் தாழ்மட்டங்களுக்கு உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக 1989 யூலை முதல் ஒத்தோபர் வரையிலான காலப் பகுதியில் அட்டவணையிடப்பட்ட பணிகள் இடைக்கிடை தடைப்பட்டமையும், நிறுத்தப்பட்டமையும் பெருமளவு காரணமாக அமைந்தன. இதன் விளைவாக இவ்வாண்டில் இலங்கைப் புகைவண்டிப் பகுதியின் வருவாய்கள் ரூ. 3,920 இலட்சத்திற்கு 16 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. புகைவண்டிப் பகுதியின் வருவாய்க் குறைப்புக்கள் 1989 யூலை, ஓகத்து, செத்தெம்பர் ஆகிய மாதங்களில் குறிப்பாகப் பதிவு செய்யப்பட்டன. மொத்தச்செலவினமான ரூ. 7,950 இலட்சத்துக்கு எதிராகப் புகைவண்டிப் பகுதியின் தொழிற்பாட்டு இழப்புக்கள் 1988 இன் ரூ. 4,790 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 4,030 இலட்சமாகக் காணப்பட்டன.

1989 இன் உள்நாட்டுக் குழப்பங்கள் நாட்டின் புகைவண்டி அமைப்பின்மீது கடுமையான இழப்புக்களை ஏற்படுத்தின. எல்லாமாக 50 புகைவண்டி நிலையங்களும், 6 புகைவண்டிகளும் சேதமாக்கப்பட்டவேளையில் 38 பாலங்கள் சேதமாக்கப்பட்டன. இழப்புக்களும் சேதங்களும் ரூ. 2,000 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் பணிகளுக்கு ஏற்பட்ட தொடர்ச்சியான தடங்கல்கள் காரணமாகத் தனியார் துறையால் வழங்கப்பட்ட பயணிகள் பணிகளும் கணிசமான வீழ்ச்சியினைப் பதிவு செய்தன. 1989 இன் உள்நாட்டுக் குழப்பங்களின்போது தனியார்துறைக்குச் சொந்தமான கிட்டத்தட்ட 65 பேருந்துகள் அழிக்கப்பட்டன. மட்டுப்படுத்தப்பட்ட பணிகள் காரணமாகவும் ஊர்தித் தொகுதிகளினதும், உதிரிப்பாகங்களினதும் அதிகரிக்கும் செலவு காரணமாகவும் வருவாய்கள் மட்டங்கள் குறைவடைந்தமை இக்கைத்தொழிலின் இலாபத் தன்மையின்மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்தன. இதனைத் தொடர்ந்து தனியார் பேருந்துப் போக்குவரத்துத் திணைக்களத்தினால் தொழிற்பாட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை 1988 இன் 1,854 இலிருந்து 1989 இல் 225 இற்குக் கடுமையாக வீழ்ச்சியடைந்தது. மோட்டார் வாகனத் திணைக்களத்தின் பதிவுகளும் தனியார்துறையின் புதிய பதிவுகளில் கணிசமான வீழ்ச்சியினை எடுத்துக் காட்டின. 1988 இன் 863 பதிவுகளுடன் ஒப்பிடுகையில் 1989 இல் உந்து சொகுசு வண்டிகளின் புதிய பதிவுகள் 444 இற்கு வீழ்ச்சியடைந்தன.

வீடமைப்பு

பத்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் முற்றுப்பெறலும், 15 இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஆரம்பமும் 1989 இன் வீடமைப்பு அபிவிருத்தித்துறையின் முக்கிய பண்புகளாகக் காணப்பட்டன. உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக மேற்கொள்ளப்பட்ட புத்தாக்க வேலைகளும் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றின்கீழ் 1989 இல் ஆரம்பிக்கப்பட்டன.

வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமானது கிராம, நகர மட்டங்களில் புகலிடம், வறுமை ஆகிய இரட்டைப் பிரச்சனைகளையும் ஒரே வேளையில் தீர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருந்தது. கிராம, நகர பெருந்தோட்டத்

துறைகளை உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சித் திட்டமானது இலக்கிடப்பட்ட குழுக்களுக்கு அடிப்படைப் புகலிட வசதிகளை வழங்குவதைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. அரசதுறை, தனியார்துறை இரண்டையும் உள்ளடக்கிய இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் தொழில் வாய்ப்புக்களினதும் வருவாயினதும் உருவாக்கமும் எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கருவாக அரசின் அதிகுறைந்த தலையீடும், வீடமைக்கும் சமூகத்திற்கான அதிகூடிய உதவியும் காணப்பட்டது. புகலிடப் பிரச்சனைகளை எதிர்நோக்கும் முழுச் சமூகத்தையும் உள்ளடக்கும் இந்த நிகழ்ச்சித் திட்டமானது பொருத்தமான கட்டுமான வேலைகளுக்காகவும், தற்போதைய வீடுகளை உயர்நிலைப்படுத்தவும், புகலிட நிலைமைகளை அதிகரிப்பதற்கும் விரிவான விருப்பத் தேர்வுகளின் மூலமான கடன்களையும் கொடைகளையும் வழங்குவதன் மூலம் அவசியமானோருக்கு அடிப்படை, பொருத்தமான புகலிடத்தை வழங்குகிறது. எனினும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதி நோக்கம் குடித்தொகையின் எல்லாப் பிரிவுகளுக்கிடையிலும் வறுமையை ஒழிப்பதேயாகும். பத்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ், தமது தன்மதியைப் பிரயோகித்து வீடொன்றினை அமைத்துக்கொள்ளும் விருப்பத்தேர்வு நன்மை பெறுவோரிடமே விடப்பட்டது.

கிராம மீள் எழுச்சி என்ற எண்ணக்கரு தத்தமது ஆக்கத்திறனின் மூலமாவும், சுயமாக நிற்றல், சமூகப் பங்கேற்பு என்பவற்றின் மூலமாகவும் வீடுகளை அமைத்துக்கொள்ளும் உறுதியை மக்களிடம் பதிய வைத்துள்ளது. அதன் நடைமுறைப்படுத்தலின்போது இந்த நிகழ்ச்சித் திட்டமானது மாதிரிக் கிராமங்கள், மீள் எழுச்சிக் கிராமங்கள், நகர வீடமைப்புச் செயற்றிட்டங்கள் ஆகிய வடிவங்களைக் கொண்டிருந்தது. இந்தத் திட்டங்களுக்குப் பாதைகள், நீர் வழங்கல் வசதிகள், மின்வலு, நலன்காப்புப் பணிகள் ஆகிய எல்லா அடிப்படை வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பத்து இலட்சம் வீடுகள் நிகழ்ச்சித் திட்டமானது துறைவாரியான துணை நிகழ்ச்சித் திட்டங்களான கிராமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், பெருந்தோட்டத்துறை வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், மகாவலி மற்றும் முக்கிய குடியேற்றத்திட்ட வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம், தனியார்துறை வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் நடைமுறைப்படுத்தலுடனான தேசிய இணைப்பு நிகழ்ச்சித் திட்டமாகும். பத்து இலட்சத்திற்கு மேலான குடும்பங்களுக்கு அடிப்படை புகலிட வசதிகளை வழங்கியதன் மூலம் தமது இலக்கில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் வெற்றி கண்டுள்ளமையால் தேசிய வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் அடுத்த கட்டம் பதினைந்து இலட்சம் குடும்பங்களை அடைவதனைத் திட்டமிட்டுள்ளது. 1990 இல் ஆரம்பமாகும் இந்நிகழ்ச்சித் திட்டம் ஆறு ஆண்டு காலத்திற்கு நீடிக்கின்றது.

முன்னைய ஆண்டைப் போலவே 1989 இல் வீடமைப்புத்துறை நடவடிக்கைகள் அடையப்பட்ட குடும்பங்கள், கட்டுமான அலகு ஆகிய இரு நியதிகளிலும் மெதுவான வளர்ச்சியையே காட்டின. 1989 யூனிலிருந்து ஒத்தோபர் வரையில் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்களும் வீடமைப்பு நிதி நிறுவனங்களில் காணப்பட்ட இக்கட்டான நிதி நிலைமையுமே இதற்குப் பெருமளவு காரணங்களாக அமைந்தன. வீடமைப்புக் கடன்களினதும் வாடகைகளினதும் மீளப்பெறல் வீதங்கள்

அட்டவணை 1.28

பத்து இலட்சம் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம் (1984 – 1989)

நிகழ்ச்சித் திட்டம்	ஆண்டு	வீடமைப்பு இலக்கு (குடும்பங்களின் எண்ணிக்கை)	அடையப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை			மூற்றுப்பெற்ற வீடமைப்பு அலகுகள்			கடன்களின் பெறுமதி (ரூ. ப. இலட்சம்)	
			வீடுகளின் கட்டுமானம்	உள்ளமைப்பு	புத்தாக்கம்	வீடுகளின் கட்டுமானம்	உள்ளமைப்பு (குடும்பங்களின் எண்ணிக்கை)	புத்தாக்கம்	திட்டமிடப் பட்டவை	உண்மை யானவை
ரோமிய வீடமைப்பு துணை நிகழ்ச்சித் திட்டம் (அ)	1984	39,984	43,213	—	—	16,092	—	—	190.0	184.8
	1985	40,679	43,977	—	—	41,135	—	—	255.3	231.1
	1986	55,856	64,194	—	—	39,793	—	—	270.9	276.3
	1987	36,700	42,969	—	—	45,245	—	—	215.0	222.5
	1988	32,000	28,455	—	—	33,393	—	—	—	161.1
	1989	18,500	19,290	—	25,238	—	—	9,975	250.0	250.0
நகர வீடமைப்ப துணை நிகழ்ச்சித் திட்டம் (ஆ)	1985	—	7,584	14,788	—	2,314	14,788	—	150.3	38.5
	1986	12,792	10,419	6,539	—	6,751	6,539	—	123.0	72.4
	1987	10,828	7,334	7,013	—	7,839	7,013	—	115.0	76.7
	1988	10,070	6,305	4,025	—	6,847	4,025	—	—	105.2
	1989	4,261	2,615	—	1,429	—	—	665	90.0	45.1

மூலம்: தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபை

(அ) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச்சபை, செவன வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம், மகாவலி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம் யொவுன் நிவகன நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களை உள்ளடக்குகிறது.

(ஆ) 'செவன சரண 1,000 இலட்சம் நிகழ்ச்சித் திட்டத்தின்' கீழ் செவன நிதியமும் வீடமைப்புக் கொடைகளை வழங்கியுள்ளது.

அதிகளவில் குறைந்திருந்தமையைக் கருத்திற் கொண்டு வாடகைக் குடியிருப் பாளர்களையும் கடன் பெற்றவர்களையும் மேலதிகக் கட்டணப் பளுவிலிருந்து விடுவிப்பதற்காகத் தேசிய வீடமைப்பு மேலாண்மைச் சபை நிவாரண நட வடிக்கைகளை அறிமுகப்படுத்தியது.

கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், பெருந்தோட்டத்துறை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், மகாவலி மற்றும் முக்கிய குடியேற்றத்திட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் என்பன அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. முன்னைய ஆண்டுகளைப் போலவே கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் கீழான வீடமைப்புக் கடன்கள் சனசமுக மட்டத்தில் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்களினூடாகவும் கிராமப் பிரதேசங்களில் கிராமோதய சபைகளினூடாகவும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்களுக் கான நிதியிடல் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையினாலும், செவன நிதியத்தினாலும் மேற்கொள்ளப்பட்டன. கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம், நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் என்பனவற்றின் கடன் பெறுநர்கள் உணவு முத்திரை பெறுபவர்களாயின் வீடமைப்புக் கடன்களை மீளளிக்கும் அவர்களினது பொறுப்பிலிருந்து இவ்வாண்டிலும் விடுவிக்கப்பட் டனர். எனினும் உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்தமையின் காரணமாக இவ் எல்லா நிகழ்ச்சித் திட்டங்களினதும் நடைமுறைப்படுத்தலின்போது இடர்ப்பாடு கள் காணப்பட்டன.

முன்னைய ஆண்டைப் போலவே, கடன்பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை இலக்கை விஞ்சியிருந்தபோதிலும் முற்றுப்பெற்ற வீடுகளின் எண்ணிக்கையின் நியதிகளில் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் 1989 இலும் பின்னடைவைக் கொண்டிருந்தது. இந்த நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1989 இற்கு 18,550 குடும்பங்களைக் கொண்ட இலக்கொன்று குறியிடப்பட்டிருந்தது. எனி னும் இவ்வாண்டில் கடன்பெறும் குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கை 19,290 ஆகக் காணப்பட்டது. 1988 இன் 14,672 உடன் ஒப்பிடுகையில் 1989 இல் கட்டுமான வேலைகள் முற்றுப்பெற்ற வீடுகளின் எண்ணிக்கை 24,406 இற்கு அதிகரித்தது. இந்த அதிகரிப்பிற்கு முன் கொண்டுசென்ற வேலை கள் 1989 இல் முற்றுப்பெற்றமையே பெருமளவிற்குக் காரணமாகும். கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ்ப் புத்தாக்க நடவடிக்கைகளுக்காக 34,238 குடும்பங்களுக்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டவேளையில் அத்த கைய கடன்பெறுவோரின் உண்மையான எண்ணிக்கை 1989 இல் 25,238 ஆகக் காணப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன் தொகை 1988 இன் ரூ. 1,570 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 1,480 இலட்சமாகக் காணப்பட்டது.

(அ) மனை இடத்தினதும் பணிகளினதும் மேம்பாடு (ஆ) சேரிகளையும் சுற் றுப்புறங்களையும் தரமுயர்த்தல் போன்றவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்ட நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டமும் பின்னடைவினைப் பதிவு செய்தது. நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 7,261 குடும்பங் களுக்குக் கடன்களை வழங்கத் திட்டமிடப்பட்டிருந்தவேளையில் 1989 இல் இத்தகைய கடன் பெறும் குடும்பங்களின் உண்மையான எண்ணிக்கை 2,615 ஆகக் காணப்பட்டது. இதேவேளை 1989 இல் மொத்த வீடமைப்புக் கடன்களில்

5,038 அலகுகள் முற்றுப் பெற்றன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செலவு ரூ. 290 இலட்சமாகும். மனை இடம், பணிகள் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 17,618 ஆகக் காணப்பட்டவேளையில் முற்றுப்பெற்ற அலகுகளின் எண்ணிக்கை 6,375 ஆகக் காணப்பட்டது. 1989 இல் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான செலவு ரூ. 230 இலட்சமாகும். நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ்ப் புத்தாக்க வேலைகளுக்காக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1,429 ஆகக் காணப்பட்டவேளையில் இவ்வாண்டின் உண்மையான பகிர்ந்தளிப்புக்கள் 1989 இன் ரூ. 1,200 இலட்ச ஒதுக்குகளுக்கு எதிராக ரூ. 1,020 இலட்சமாகக் காணப்பட்டன.

நடுத்தரகால முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம், நோர்வேஜியன்—ஒல்லாந்து நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றினால் உதவியளிக்கப்பட்ட பெருந்தோட்டத்துறை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டம் 1989 இற்கு நீடிக்கப்பட்டது. மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை, இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனம் என்பனவற்றினால் நடைமுறைப்படுத்தப்படும் இந் நிகழ்ச்சித்திட்ட மானது ஆண்டு முழுவதும் நாட்டின் சில பகுதிகளில் நிலவிய தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக மெதுவான முன்னேற்றத்தைக் காட்டியது. தற்காலிக தரவுகளின்படி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினால் 367 புதிய தொழிலாளர் வீடுகளைக் கட்டி முடிக்கவும் 455 தரமுயர்த்தல்களை மேற் கொள்ளவும் மட்டுமே இயலுமாக இருந்தது. மேலும் 1989 இல் 3,076 குடும் பங்களுக்கு நீர் வழங்கலும் நலத்துறை வசதிகளும் வழங்கப்பட்டன. இதே போன்று 1989 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தோட்டத் தொழிலாளர்களுக்காக 712 வீடுகளைக் கட்டியும் தரமுயர்த்தியும் வழங்கிய தோடு 10 குழந்தை நலக்காப்பு நிலையங்களையும் கட்டி முடித்தது. மேலும் 458 வீடுகளுக்கு கழிவறை வசதிகளும் நீர் வழங்கல் வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன.

மகாவலி மற்றும் முக்கிய குடியேற்றத் திட்ட வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முறை எச்,பி,சி,ஜி என்பனவற்றில் 1,964 வீடுகளுக்குக் கூரைப் பொருட்கள் வழங்கப்பட்டன. ஐரோப்பிய பொருளாதாரச் சமூகக் கடன்கள் திட்டத்தின் கீழ் முறை பி, சி, ஜி என்பனவற்றின் குடும்பங்களுக்கு வீடுகளைக் கட்டுவதற்காகக் குடும்பமொன்றுக்கு ரூ. 12,000 வீதம் வழங்கப்பட்டது. முக்கிய குடியேற்றத் திட்டப் பிரதேசங்களில் வீடுகளைக் கட்டுவதற்காக நில ஆணை யாளர் திணைக்களமும் கொடைகளை வழங்கியது. 1989 இல் இப்பிரதேசங் களில் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்களின் அதிகரிப்புக் காரணமாக இலக்குகளை அடைய முடியாதுபோன போதிலும் இந்த நிகழ்ச்சித் திட்டமானது வீடமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தியது.

தற்காலிகத் தரவுகளின்படி 1988 இன் ரூ. 4,830 இலட்சத்துடன் ஒப் பிடுகையில் 1989 இல் அரசதுறை வீடமைப்புக்கான மொத்தச் செலவு ரூ. 4,790 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1989 இன் மொத்தச் செலவில் ரூ. 2,500 இலட்சம் கிராமிய வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் மீதும் ரூ. 590 இலட்சம் நகர வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் மீதும் செலவிடப் பட்டது.

ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் உள்நாட்டுக் குழப்பங்கள் அதிகரித்தமை யின் காரணமாக அரசதுறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தைப்போலவே தனியார்துறை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டமும் பாதிக்கப்பட்டது.

அத்துடன், வீடமைப்புக் கடன்களின் குறைந்த மீளப்பெறல் வீதங்கள் காரணமாக வீடமைப்புக் கடன் நிறுவனங்களின் நிதி நிலைமை மோசமடைந்தமையைப் பிரதிபலிக்கும் விதத்தில் புதிய கட்டுமான நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்ட கடன்களின் மட்டம் குறைவாக தாழ் மட்டத்தில் காணப்பட்டது. எனினும் அரசஈட்டு முதலீட்டு வங்கி வரையறுக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், ரெட்பானா, பன்னாட்டு அபிவிருத்திக்கான முகவர் நிலையம், பன்னாட்டுத் திட்டம் என்பன தனிப்பட்டோருக்கும் உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்களுக்கும் வீடமைப்பு நிதியத்தினை வழங்கும் முக்கிய மூலங்களாகத் தொடர்ந்தும் விளங்கின. தனியார்துறையும் தேசிய சேமிப்பு வங்கி, வர்த்தக வங்கிகள் சிறப்பாக இலங்கை வங்கி, மக்கள் வங்கி என்பனவற்றிலிருந்து வீடமைப்புக் கடன்களையும் ஈட்டுக் கடன்களையும் பெற்றுக் கொண்டது.

கொழும்பு மாநகர சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட கட்டிடங்களின் அடிப்படையில் தனியார்துறை வீடமைப்புத் துணை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாநகர சபைப் பிரதேசங்களில் வீடமைப்பு நடவடிக்கைகளின் முக்கிய போக்கினை அடையாளம் காணமுடியும். 1988 இல் ஒப்புதலளிக்கப்பட்ட 531 வதிவிடக் கட்டட விண்ணப்பங்களுக்கு எதிராக 1989 இல் கொழும்பு மாநகர சபை 492 ஒப்புதல்களை வழங்கியது.

அரசஈட்டு முதலீட்டு வங்கி தனிப்பட்டோருக்கும் உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்களுக்கும் வீடமைப்பு நிதியை வழங்கும் முக்கிய மூலமாகத் தொடர்ந்தும் விளங்கியது. 1989 இல் வீடமைப்பு நோக்கங்களுக்காக ஒப்பு தலளிக்கப்பட்ட கடன்களின் மொத்தம் 1988 இன் ரூ. 5,420 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ.3,350 இலட்சமாகக் காணப்பட்டது. இதேபோன்று வீடமைப்பு நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையும் 1988 இன் 4,730 உடன்ஒப்பிடுகையில் 1989 இல் 2,889 இற்கு வீழ்ச்சியடைந்தது. இது 1989இல் வங்கியினால் வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில் 88 சதவீதத்தைக் கொண்டிருந்தது. ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையிலேற்பட்ட குறைப்பிற்கு உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக வீடமைப்புக் கடன்கள் மீதான குறைந்த மீளப்பெறல் வீதங்கள் முதன்மைக் காரணமாகும். 1989 இல் வீடமைப்புக் கடன்கள்மீது விதிக்கப்பட்ட வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 5 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்குமிடையிலான வீச்சில் காணப்பட்டது. வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமும் அதன் உதவுதொகையாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வீடமைப்பு நோக்கங்களுக்காகக் கடன்களை வழங்கியது. வீடமைப்பு நோக்கங்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்கள் 1988 இன் ரூ. 340 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 110 இலட்சமாக விளங்கின. முன்னைய ஆண்டைப் போலவே கடன் பகிர்ந்தளிப்பின் மெதுவான முன்னேற்றத்திற்கு நிதியங்களைத் திரட்ட இயலாது காணப்பட்டமையும் கடந்த காலக் கடன்களின் குறைந்த மீளப்பெறல் வீதங்களும் பெருமளவுக்குக் காரணமாக அமைந்தன. 1989 இல் வீடமைப்புக் கடன்கள் மீதான வட்டி வீதம் ஆண்டொன்றுக்கு 6 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் காணப்பட்டது.

நகர அபிவிருத்தி

முக்கிய நிருவாக, வர்த்தக, வாடிக்கையாளர் செயற்றிட்டங்கள் என்பன முற்றுப் பெற்றிருந்ததன் காரணமாக 1989 இல் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நகர அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கை

கள் மெதுவான போக்கினைக் கொண்டிருந்தன. இவ்வாண்டில் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் குறிப்பிடத்தக்க சாதனையாக நீதி அமைச்சுக்கான 220,000 சதுர அடிகளைக் கொண்ட உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதியின் கட்டுமான ஒருங்கிணைப்பு விளங்கியது. இந்தக் கட்டடம் 1989 மேயில் உயர் நீதிமன்றங்களின் வைபவ ரீதியான அமர்வுக்காக நிறைவு செய்யப்பட்டுக் கையளிக் கப்பட்டது. மேலும் நகர அபிவிருத்தி மேலாண்மைச் சபை பல்லேகெல என்ற இடத்தில் சனசவிய மத்திய நிலையம், மகியங்கனை, தெகிவளை—கல்கிசை பிரதேசங்களின் நகர அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் சீகிரிய பண்டைய நகரம் என்பவற்றிற்கான திட்டங்களையும் தயாரித்து முடித்தது. பேலியகொடை ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி செயற்றிட்டத்தின்கீழ் 1989 இல் குடும்பங் களின் மீள் குடியமர்வுக்காக 31 வீடுகள் கட்டப்பட்டதோடு வீடமைப்புத் தொகுதியின் அபிவிருத்திக்காக 30 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. மேலும் 1989 இல் வாடிக்கையாளர் செயற்றிட்டங்களின் கீழ் கோமாகம (60 ச.கிமீ) என்ற இடத்தில் கட்டுவான கைத்தொழில் செயற்றிட்டத்தின் முதலாவது கட்ட வேலைகளும் முற்றுப்பெற்றன. 1990 இல் ரூ. 350 இலட்சம் செலவில் இச் செயற்றிட்டத்தினை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நகர அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் மீதான மொத்தச் செலவு 1988 இன் ரூ. 5,100 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ரூ. 1,540 இலட்சமாக விளங்கியது. மொத்தச் செலவில் ரூ. 780 இலட்சம் அல்லது 51 சதவீதம் வாடிக்கையாளர்களின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்களின்மீதான தாகும். நில வங்கியினால் பாவனைக்குட்படுத்தப்படாததும், குறைவாக அபி விருத்தி செய்யப்பட்டதும், கவனிப்பற்றுக் கிடந்ததுமான நிலங்களைக் கொள் வனவு செய்வதற்காக மேலும் ரூ. 390 இலட்சம் செலவிடப்பட்டது. 1989 இல் ரூ. 130 இலட்சங் கொண்ட மேலதிகத் தொகையொன்று கைத்தொழில், ஒருங்கிணைக்கப்பட்ட செயற்றிட்டங்கள் என்பனவற்றின்மீது பயன்படுத்தப்பட் டது

6. தொடர்புப் பணிகள்

உள்நாட்டுக் குழப்பங்களின் அதிகரிப்புடன் 1989 இல் அஞ்சல், தொலைத் தொடர்பு ஆகிய இரு திணைக்களங்களினாலும் வழங்கப்பட்ட பணிகள் கணிச மாகத் தடைப்பட்டன. எனினும் அமைதியற்ற சூழலிலும் ஆகக் குறைந்த நாளாந்த பணிகளை வழங்குவதற்கு இவ்விரு திணைக்களங்களும் முயற்சிகளை மேற்கொண்டன.

உள்நாட்டினதும் வெளிநாட்டினதும் அஞ்சல்கள் குறைவடைந்தமையின் காரணமாக அஞ்சல் திணைக்களத்தினால் கையாளப்பட்ட பொருட்களின் எண் ணிக்கை 1988 இன் 6,190 இலட்சத்திலிருந்து 1989 இல் 4,880 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டு அஞ்சல்களின் கையாளல் 1988 இன் 5,340 இலட்சத்திலிருந்து 1989 இல் 4,110 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன் உள்நாட்டுப் பொதிகளின் கையாளலும் 1988 இன் 637,000 இலிருந்து 1989 இல் 561,000 இற்கு வீழ்ச்சியடைந்தது. இதேபோன்று வெளிநாட்டு அஞ்சல் களின் கையாளலும் 1988 இன் 840 இலட்சத்திலிருந்து 1989 இல் 760 இலட் சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வெளிநாட்டுப் பொதிகளின் கையாளலும் 1988 இன் 77,000 இலிருந்து 1989 இல் 70,000 இற்கு வீழ்ச்சியடைந்தது.

அஞ்சல், நடவடிக்கைகளில் வீழ்ச்சியொன்று காணப்பட்டபோதிலும் அலுவலகங்களின் கிளை அமைப்பு 1988 இன் 3,869 இலிருந்து 1989 இல் 3,908 இற்கு விரிவடைந்தது. ஆய்விற்குரிய ஆண்டில் 3 முதன்மை அஞ்சல் அலுவலகங்களும் 9 துணை அஞ்சல் அலுவலகங்களும் 27 முகவர் அஞ்சல் அலுவலகங்களும் திறக்கப்பட்டன. இதன் விளைவாக 1988 இன் 17 சதுர கிலோ மீற்றர்களுடன் ஒப்பிடுகையில் 1989 இல் அஞ்சல் அலுவலகமொன்றினால் பணிகள் வழங்கப்பட்ட சராசரிப் பரப்பு 16.8 சதுர கிலோமீற்றர்களுக்குச் சுருங்கியது. பொது மக்களுக்கான அஞ்சல் பணிகளின் கிடைக்கத்தக்க தன்மையினதும் அடையக்கூடிய தன்மையினதும் அதிகரிப்பினை இது எடுத்துக் காட்டுகின்றது. இதேவேளையில் வதிவோர் ஒருவருக்கான கடிதங்களின் எண்ணிக்கை 1988 இன் 32 இலிருந்து 1989 இல் 28 இற்கு வீழ்ச்சியடைந்தது.

அஞ்சல் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிகள் ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் கணிசமாகத் தடைப்பட்டன. 1989 இல் 624 இற்கு மேற்பட்ட அஞ்சல் அலுவலகங்கள் சேதமாக்கப்பட்டதோடு 100 இற்கு மேற்பட்ட அஞ்சல் அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. திணைக்களத்தின் சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் ரூ. 650 இலட்சம் வரையிலாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் இலங்கையின் தென்பாகத்தில் 42 முதலாம் தர அஞ்சல் அலுவலகங்களும் 40 இரண்டாம் தர அஞ்சல் அலுவலகங்களும் 821 துணை அஞ்சல் அலுவலகங்களும் எந்த விதத்திலும் இயங்க முடியாது காணப்பட்டன. எஞ்சிய ஏனைய அலுவலகங்களில் பெரும்பாலானவை கூட இவ்வாண்டில் பொதுவான மட்டத்திற்குக் கீழேயே இயங்கின.

உள்நாட்டுக் குழப்பங்களின் மத்தியிலும் தொலைத்தொடர்புத்துறையின் நடவடிக்கைகள் 1989 இல் விரிவடைந்தன. நகர்ப் பகுதிகளிலும், சுற்றுப்புறப் பகுதிகளிலும் ஆழி, பரிவர்த்தனை இயலளவுகள் விரிவாக்கப்பட்ட வேளையில் தற்போதைய தொலைத்தொடர்புக் கிளை அமைப்பினை புத்தாக்கம் செய்வதற்கும் தரமுயர்த்துவதற்குமான பல செயற்றிட்டங்கள் முற்றுப்பெற்றன.

இவ்வாண்டில் கொழும்பு பெரும்பாகக் கிளை அமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் 50 சதவீதமான பகுதி முற்றுப்பெற்றது. 1989 இல் கொழும்புப் பிரதேச அபிவிருத்தித் திட்டம் IV செயற்றிட்டத்தின்கீழ்க் கொழும்பு நகரிலும் கொழும்பு வடக்கிலும் முறையே 25,000 இணைப்புகள், 12,000 இணைப்புகள் இயலளவுகளைக் கொண்ட இரண்டு புதிய பரிவர்த்தனை நிலையங்கள் தொடங்கப்பட்டன. கலுத்துறை கிராமியப் பிரதேச அபிவிருத்திச் செயற் திட்டத்தினது கிட்டத்தட்ட 50 சதவீதமான வேலையும் இவ்வாண்டில் முற்றுப்பெற்றது.

தொலைத்தொடர்புப் பணிகளின் விரிவாக்கமும் மேம்பாடும் காரணமாகப் பொது மக்களுக்கு வழங்கப்பட்ட தொலைபேசி இணைப்புகளின் எண்ணிக்கை 1989 இல் 108,000 இற்கு 4 சதவீதத்தினால் அதிகரித்தது. புதிய தொலைபேசிகளுக்கான 49,903 விண்ணப்பங்கள் காணப்பட்டபோதும் 1988 இன் 5,000 த்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் தொலைத் தொடர்புத் திணைக்களத்தினால் 3,792 புதிய இணைப்புக்களை மட்டுமே வழங்க இயலுமாகக் காணப்பட்டது. இதே வேளையில் 1989 இல் டெலெக்ஸ் இணைப்புக்களின் மொத்த எண்ணிக்கை 1,579 இற்கு 3 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும் 1989 இல் கடல்கடந்த அழைப்புக்களின் எண்ணிக்கை 13 சதவீதத்தினால் 1,643,538 இற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் கடல்கடந்த தொலைபேசி அழைப்புக்களின் எண்ணிக்கை 29 சதவீதத்தினால் 2,251,197 இற்கு அதிகரித்தது.

அட்டவணை 1.29

அஞ்சல் தொலைத் தொடர்புப் பணிகளின் வளர்ச்சி 1985—1989

	1985	1986	1987	1988	1989
1. அஞ்சல் பணிகள்					
1.1 அஞ்சல் வழங்கும் பரப்புகளின் எண்ணிக்கை	6,612	6,614	6,621	6,621	6,630
1.2 அஞ்சல் நிலைய பணிக்குட்பட்ட பரப்பு (ச.கி.மீ.)	1.78	17.6	17.4	17.0	16.8
1.3 அஞ்சல் நிலையங்களின் மொத்த எண்ணிக்கை	3,690	3,727	3,778	3,869	3,908
1.3.1 அரசு	3,693	3,708	3,757	3,829	3,841
1.3.2 தனியார்	17	19	21	40	67
1.4 ஒரு அஞ்சல் நிலையத்தின் பணிக்குட்பட்ட மக்கள் தொகை	4,305	4,321	4,335	4,306	4,406
1.5 சூடியிருப்பாக ஒருவருக்கு கிடைக்கும் கடிதங்களின் எண்ணிக்கை ..	42	37	35	32	28
2. தொலைத் தொடர்புப் பணி					
2.1 உள்நாட்டுத் தொலைபேசிப் பணி					
2.1.1 தொலைபேசி இணைப்புக்களின் எண்ணிக்கை	87,686	92,605	97,832	104,208	108,000
2.1.2 வழங்கப்பட்ட புதிய தொலைபேசி இணைப்புக்கள்	7,486	4,379	5,073	5,000	3,792
2.1.3 இணைப்புக்களை எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை ...	45,693	16,939	27,016	50,994	49,903
2.1.4 தொலைபேசிகளின் கோள்வி (எண்ணிக்கை)	133,379	109,004	124,848	155,202	157,903
2.1.5 தொலைபேசிகளின் பரம்பல் (ஒவ்வொரு 100 ஆட்களுக்கான தொலைபேசி) ..	0.55	0.57	0.59	0.62	0.64
2.2 கடல் கடந்த தொலைத் தொடர்புப் பணி					
2.2.1 செல்லல் இணைப்புக்களின் எண்ணிக்கை*	1,235	1,338	1,378	1,535	1,579
2.2.2 எதிர்பார்த்துள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை	1,186	1,292	135	127	141
2.2.3 வெளிச் செல்லும் பணிகள் (எண்ணிக்கை)					
2.2.3.1 வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகள் (அ)	477,872	1,054,590	6,001,188	1,743,709	2,251,197
2.2.3.2 வெளிநாட்டுத் தந்திகள் (ஆ)	171,118	145,940	3,907,144	90,916	103,052
2.2.3.3 வெளிநாட்டு செல்லல் அழைப்புக்கள் (அ)	2,229,423	1,837,951	4,854,422	1,896,648	1,643,538

* ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலுள்ள நிலையை எண் தொகைகள் குறிக்கின்றன.

(அ) 1987ஆம் ஆண்டிலிருந்து எண் தொகைகள் நிமிடங்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.

(ஆ) 1987ஆம் ஆண்டிலிருந்து எண் தொகைகள் சொற்களின் எண்ணிக்கைகளில் தரப்பட்டுள்ளன.

மூலங்கள்: அஞ்சல் திணைக்களம்
தொலைத்தொடர்புத் திணைக்களம்

இந்த அபிவிருத்திகளின் மத்தியிலும், ஆண்டின் இறுதி அரைப்பகுதியில் நிலவிய உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக நாட்டின் சில பாகங்களின் பணிகள் தடைப்பட்டமையால் தொலைத்தொடர்புப் பணிகளில் பின்னடை வொன்று காணப்பட்டது. மடுல்சீமா, கொஸ்லந்தை, திகணை, இராகலை ஆகிய இடங்களில் தொலைத் தொடர்புப் பொறிகள் முழுமையாகச் சேதமாக்கப் பட்டன. மொத்த இழப்புக்கள் கிட்டத்தட்ட ரூ. 530 இலட்சம் என மதிப்பிடப் பட்டுள்ளவேளையில் இவ்வாண்டில் திணைக்களத்துக்கான வருவாய் இழப்புக்கள் ரூ. 20 இலட்சத்திற்கும் அதிகமானதாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டில் தரப்படுத்தப்பட்ட பேணல் நடவடிக்கைகளை மேற்கொள்ள இய லாது போனமையினால் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிகள் திருப்திகர மானதாகக் காணப்படவில்லை.

கல்வி

தற்போதைய கல்வி முறையானது கல்வி அமைச்சு, உயர் கல்வி, அறிவியல் தொழில்நுட்ப அலுவல்கள் அமைச்சு ஆகிய இரு அமைச்சுக்களின் கீழ்ப் பொதுக் கல்வி உயர் கல்வி, ஆகிய இரு துணைத்துறைகளின் அடிப்படையில் அமைக்கப் பட்டுள்ளது. தொழில்நுட்ப, பல்கலைக்கழகக் கல்வியின் திட்டமிடலும் அமைப் பும் உயர் கல்வி அமைச்சின் கீழ் அடங்கும்.

1989 இல் கல்விக் கொள்கையானது அடிப்படைக் கல்வி சார்ந்த பொதுக் கல்வியினையும் தொழில்நுட்பக்கல்வியினையும் முன்னேற்றுவதனையும், தேர்ச்சிப் பயிர்ச்சியினை முன்னேற்றுவதனையும் வலியுறுத்தியது. இந்த நோக்கத்தின்பொரு ட்டு உலக வங்கியினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் ஒத்துழைப்புடன் ஆசிரியர் கல்வி, பள்ளிக்கூடங்களின் உள்ளமைப்பு வசதிகளின் அபிவிருத்தி, நிரு வாகத்தைப் பன்முகப்படுத்தல், பிரிவுகள் மட்டத்திலும் பள்ளிக்கூட மட்டத்திலு மான திட்டமிடல் போன்ற பொதுக் கல்வியின் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங் களை மேப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பள்ளிக் கூடத்திலிருந்து விலகிச் செல்வோருக்குத் தொழிற்பயிற்சியையும் தொழில்நுட்பப் பயிற்சியையும் வழங்கும் பொருட்டு 5 ஆண்டுகளில் 540 தேர்ச்சிப் பயிற்சி நிலையங்களை (சில்பயாயதன) நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளிக் கூடங்களை விட்டு விலகுவோருக்குத் தச்சுத்தொழில், கொத்தனார் வேலை, இயந்திரத்தொழில் போன்ற பலதரப்பட்ட விடயங்களில் பயிற்சி அளிப்பதற்கான 9 தொழிற் பயிற்சி நிலையங்களையும் தொழில் திணைக்களம் ஆரம்பித்தது.

1989 இல் தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாகப் பொதுக் கல்வியினதும், பல்கலைக்கழகக் கல்வியினதும் நடவடிக்கைகள் மோச மாகப் பின்னடைந்தன. வடக்கு—கிழக்கு மாகாணத்திலுள்ளவற்றைத் தவிர்ந்த எல்லாப் பள்ளிக்கூடங்களும் பல்கலைக்கழகங்களும் ஆண்டின் நீண்டகாலப் பகுதி யில் மாணவர்களுக்காக மூடப்பட்டிருந்தன. நாசகார நடவடிக்கைகளின் காரண மாகக் கட்டடங்களும் பொறிகளும் பெருமளவில் சேதமாக்கப்பட்டன.

இதேவேளையில் நாட்டின் பள்ளிக்கூட ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளைக் கல்வி அமைச்சு மேற்கொண்டது. இதன் படி 1989 இல் 20,000 இற்கு மேற்பட்ட பயிலுனர் ஆசிரியர்கள் உட்பட 36,823 ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கை 1988 இன் 146,334 இலிருந்து 1989 இல் 183,157 இற்கு அதிகரித்தது.

1989 இல் திறந்த பல்கலைக்கழகத்தையும் உள்ளடக்கிய ஒன்பது பல்கலைக் கழகங்களின் மூலமாகவும் ஆறு பட்டப்பின்படிப்பு மற்றும் ஏனைய நிறுவனங் களின் மூலமாகவும் உயர்கல்வி வழங்கப்பட்டது. இவ்வாண்டில் நிலவிய அமைதி யின்மையின் காரணமாக பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகள் ஒழுங்கற்றுக் காணப்பட்டன. எனவே 1989 கல்வி ஆண்டுக்காக அட்டவணையிடப்பட்ட பரீட்சைகளைப் பின்போட வேண்டியேற்பட்டது. இதன்படி தொடர்ச்சியாக மூன்றுவது ஆண்டிலும் பட்டதாரிகளின் வெளியீடு பதிவு செய்யப்படவில்லை.

இவ்வாண்டில், கம்பகாவில் புதிய இணைக்கப்பட்ட தொழில்நுட்பப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து தொழில்நுட்பக் கல்லூரிகளின் எண் ணிக்கை 30 இற்கு அதிகரித்தது. 1989 இல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் கிட்டத்தட்ட 14,500 பேர் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். தொழில் நுட்பக் கல்லூரிகளின் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 1988 இன் 20,673 உடன் ஒப்பிடுகையில் 1989 இல் 20,848 ஆகக் காணப்பட்டது. இதில் 4,267 பேர் டிப்புளோமாப் பயிற்சி நெறிகளைப் பின்பற்றியவேளையில் 11,626 பேர் வர்த்தக, சான்றிதழ் பயிற்சி நெறிகளைப் பின்பற்றினர். 1989 இல் தொழில் நுட்பக் கல்லூரிகளில் கல்விசார் அலுவலர்களின் எண்ணிக்கை 43 சதவீதத்தினால் 655 இற்குக் குறைவடைந்தது. இதன்படி ஆசிரியர்/மாணவர் விகிதம் 1988 இன் 1: 30 இலிருந்து 1989 இல் 1: 33 இற்குக் குறைவடைந்தது.

நலத்துறை

மொத்தக் குடித்தொகைக்கும் அனைத்தையும் உள்ளடக்கிய நலப்பணி களின் வழங்கலை உதவி செய்யும் அடிப்படையிலேயே இலங்கையின் தேசிய நலக்கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இந்த நோக்கத்தின் பொருட்டு 1989 இல் நலத்துறை, மகளிர் அலுவல்கள் அமைச்சு நலத்துறை ஆயுர்வேத பணிகளுக்கு அவசியமான வழிகாட்டி, கொள்கை, பணிப்புரை என்பவற்றை வழங்கியுள்ளது. 2000ஆம் ஆண்டில் எல்லோருக்கும் நலம் என்ற இலக்கை அடையும் நோக்குடன் தொடக்க நலக் கவனிப்பை மேம்படுத்தும் அவசியத்தை அமைச்சினால் உருவாக் கப்பட்ட உத்தி வலியுறுத்துகின்றது.

1989 இல் நலத்துறை நடவடிக்கைகள் மாகாண சபைகளின் கீழ்ப் பன்முகப் படுத்தப்பட்டன. இதன்படி, மாகாண சபைகளுக்குத் திட்டமிடல், நிதியிடல், நோயாளர் கவனிப்புப் பணிகள், பொதுநலப் பணிகள், சிறப்புப் பிரசாரங்கள், ஆளணி முகாமைத்துவம் என்பவற்றில் மாகாண சபை மட்டத்தில் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த அபிவிருத்திகளுக்கு மத்தியிலும், நலத்துறையுடன் தொடர்பான நடவடிக்கைகள் குறிப்பாக 1989 யூனிலிருந்து ஒத்தோபர் வரையிலான காலப் பகுதியில் அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக மோசமாகத் தடைப்பட்டன. நாச வேலைகளினால் ஏற்பட்ட மூலதன இழப்பு கிட்டத்தட்ட ரூ. 20 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. நலத்துறை ஆளணியினரின் சட்டப்படி வேலை செய்யும் இயக்கமும் தற்காலிக வேலை இடைநிறுத்தமும் நலத்துறையில் பாதகமான தாக்கங்களைக் கொண்டிருந்தன. மேலும் வைத்திய அலுவலர்களின் வெளிச்செல்லல் காரணமாகப் பயிற்றப்பட்ட ஆளணியினருக் கான கடுமையான பற்றுக்குறையும் உயர் கல்விக்கான தடங்கலும், புவியியல் பிரதேசங்களுக்கிடையில் கிடைக்கத்தக்க அலுவலர்களின் சீரற்ற பரம்பலும் பொதுமக்களுக்குக் கடும் இடர்களை ஏற்படுத்தின.

இவ்வாண்டில் மேல்நாட்டு வைத்தியத்திற்கு இணையான பணிகளை வழங்குவதில் நாட்டு வைத்தியத்துறை தொடர்ந்தும் முக்கிய பங்கினை வகித்தது. நாட்டு வைத்தியத்துடன் தொடர்பான பயிற்சி, கல்வி, ஆராய்ச்சி, மூலிகை வளர்ப்பு போன்ற நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. மேலும் வைத்திய வசதிகளின் கிடைக்கத்தக்க தன்மையை விரிவாக்கும் நோக்கில் தேர்தல் தொகுதி அடிப்படையில் 11 மத்திய மருந்தகங்கள் திறக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து 1989 இறுதியில் அத்தகைய மருந்தகங்களின் எண்ணிக்கை 65 இற்கு அதிகரித்தது. மேலதிகமாக 28 அரச ஆயுர்வேத வைத்தியசாலைகள் அனைத்தையும் உள்ளடக்கிய நலப்பணிகளைப் பொதுமக்களுக்கு வழங்கின. உள்ளூராட்சி மன்றங்களினால் நடத்தப்பட்ட இலவச ஆயுர்வேத மருந்தகங்களின் எண்ணிக்கையும் 1988 இன் 231 இலிருந்து 1989 இல் 232 இற்கு அதிகரித்தது.

விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டம்

முதன்மை நீர்த்தேக்கங்களின் சுற்றுப்புறப் பிரதேசங்களில் குடியமர்த்தப்பட்டவர்களின் அல்லது மீள் குடியமர்த்தப்பட்டவர்களின் பொருளாதார சமூக நிலைமைகளை மேம்படுத்துவதிலேயே 1989 இல் விரைவு படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டம் அதிக அழுத்தத்தைக் கொண்டிருந்தது. 1989 இன் இறுதி வரையில் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மொத்தச் செலவு ரூ. 491,470 இலட்சமாக விளங்கியது. இதில் 6 சதவீதம் அல்லது ரூ. 27,080 இலட்சம் 1989 இல் செலவிடப்பட்டது. பின்னையதில் கிட்டத்தட்ட 65 சதவீதம் அல்லது ரூ. 17,710 இலட்சம் முறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீது செலவிடப்பட்டது; முறை ''சீ'' (ரூ. 12,220 இலட்சம்) முறை ''பீ'' (ரூ. 4,500 இலட்சம்) முறை ''ஜீ'' (ரூ. 210 இலட்சம்) முறை ''எல்'' (ரூ. 780 இலட்சம்).

1989 இல் விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்வரும் நீர் மின்வலு செயற்றிட்டங்களினால் 1,299 கிகாவாட் மணித்தியாலங்களைக் கொண்ட வலு உருவாக்கப்பட்டது: விக்டோரியா (617 கிவாம), கொத்மலை (331 கிவாம); ரன்தெனிகலை (351 கிவாம). இது விரைவுபடுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் 1988 இல் உருவாக்கப்பட்ட மொத்த வலுவினைவிட 11 சதவீத அதிகரிப்பை எடுத்துக் காட்டியதோடு மொத்தத் தேசிய வலு உருவாக்கத்தில் 45 சதவீதத்திற்கும் வகை கூறியது.

விக்டோரியா சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உடிஸ்பத்துவ, காரகம என்பவற்றின் வலது கரையில் உள்ள குருதெனியவில் புதிய நகராக்க கட்டுமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1989 இறுதியில் விக்டோரியா செயற்றிட்டத்தின் மீதான மொத்தச் செலவு ரூ. 93,160 இலட்சமாக விளங்கியதோடு இதில் ரூ. 760 இலட்சம் 1989 இல் செலவிடப்பட்டது.

கொத்மலைச் சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொத்மலை புதிய நகரின் உள்ளமைப்பு வசதிகளுக்கான கட்டுமான வேலைகள் 1989 இல் நடைபெற்றுக்கொண்டிருந்தன. 1989 இறுதியில் கொத்மலை செயற்றிட்டத்தின் மீதான செலவு ரூ. 99,450 இலட்சமாக விளங்கியது. இதில் ரூ. 630 இலட்சம் 1989 இல் செலவிடப்பட்டது.

அட்டவணை 1.30

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் புதிதாக பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பு

எக்டேயர்கள்

விடயம்	பெரும் போகம் 1985/86	சிறு போகம் 1986	மொத்தம் 1986	பெரும் போகம் 1986/87	சிறு போகம் 1987	மொத்தம் 1987	பெரும் போகம் 1987/88	சிறு போகம் 1988	மொத்தம் 1988	பெரும் போகம் 1988/89 (அ)	சிறு போகம் 1989 (அ)	மொத்தம் 1989 (அ)
முறை 'எச்'	24,298	21,225	45,523	24,913	9,661	34,574	24,847	12,830	37,677	19,076	4,137	23,213
நெல்	23,449	8,983	32,432	23,317	3,295	26,612	23,560	3,951	27,511	17,300	1,455	18,815
ஏனைய பயிர்கள்	849	12,242	13,091	1,596	6,366	7,962	1,287	8,879	10,166	1,716	2,682	4,398
முறை 'பி'	3,851	3,554	7,405	5,902	5,952	11,854	6,241	6,413	12,654	9,014	9,306	18,320
நெல்	3,686	3,463	7,149	5,120	5,626	10,746	5,850	5,945	11,795	8,688	8,669	17,357
ஏனைய பயிர்கள்	165	91	256	782	326	1,108	391	468	859	326	637	963
முறை 'சி'	9,358	7,868	17,226	9,865	9,588	19,453	13,362	11,219	24,581	13,105	12,808	25,913
நெல்	7,945	7,782	15,727	9,258	9,480	18,738	11,618	11,155	22,773	11,565	12,409	23,974
ஏனைய பயிர்கள்	1,413	86	1,499	607	108	715	1,744	64	1,808	1,540	399	1,939
முறை 'ஜி'	3,315	2,731	6,046	4,033	4,120	8,153	4,243	3,613	7,856	4,381	3,825	8,206
நெல்	3,153	1,423	4,576	3,805	2,285	6,090	3,830	1,740	5,570	4,104	1,842	5,946
ஏனைய பயிர்கள்	162	1,308	1,470	228	1,835	2,063	413	1,873	2,286	277	1,983	2,260
மொத்தம்	40,822	35,378	76,200	44,713	29,321	74,034	48,693	34,075	82,768	45,576	30,076	75,652

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மகாவலி மேலாண்மைச் சபை.

ரன்தெனிகல செயற்றிட்டத்தின் சுற்றுப்புற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே உள்ள பாதைகளை மேம்படுத்துதல், புதிய குடியமர்வுப் பிரதேசங்களுக்கான சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் பற்றிய ஆராய்ச்சி என்பன பற்றிய ஆய்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 1989 இறுதியில் ரன்தெனிகல செயற்றிட்டத்தின் மீதான திரண்ட செலவு ரூ. 57,230 இலட்சமாக விளங்கியது. இதில் ரூ. 480 இலட்சம் 1989 இல் செலவிடப்பட்டது. மகியங்கனை, கிராந்துரு கோட்டை, தெகிஅத்தகண்டிய ஆகிய இடங்களினூடாகப் பொலனறுவையை இணைக்கும் விக்டோரியா—ரன்தெனிகல புதிய பாதை 1989 இல் போக்கு வரத்துக்காகத் திறக்கப்பட்டது. ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் நிதி உதவியுடன் மகாவலி முறை 'பீ' யில் வெலிகந்த என்ற இடத்தில் அமைக்சப்பட்ட புதிய நகரத் தொகுதி 1989 இல் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

1988–1989 பெரும்போகத்தில் மகாவலி அதிகாரப் பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்ட மொத்தப் பரப்பு 45,576 எக்டேயர்கள் எனத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டில் இதே போகத்தில் பயிரிடப்பட்ட பரப்பை விட 6 சதவீத வீழ்ச்சியைக் காட்டி முக்கியமாக முறை ''எச்'' இலும் ''சீ'' யிலும் பயிரிடப்பட்ட குறைந்த நிலப்பரப்பைப் பிரதிபலிப்பதாக இருந்தது. பெரும் போகத்தில் முறை ''பி'' யிலும் முறை ''ஜீ'' யிலும் பயிர் செய்யப்பட்ட பரப்பு முறையே 44 சதவீதத்தினாலும் 3 சதவீதத்தினாலும் அதிகரித்தன. 1989 சிறுபோகத்திலும் மகாவலி அதிகாரப் பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்ட மொத்தப் பரப்பு, முறை ''எச்'' இல் பயிர்ச்செய்கையின் கீழ்க் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு கணிசமான அளவில் குறைவடைந்தமையின் காரணமாக 12 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து 30,076 எக்டேயர்களாக விளங்கியது.

முக்கியமாக அமைதியின்மை காரணமாக 1989 சிறுபோகத்தில் முறை 'எச்' இல் பயிர் செய்யப்பட்ட நிலப்பரப்பும் 68 சதவீதத்தினால் 4,137 எக்டேயர்களுக்குக் கணிசமாக வீழ்ச்சியடைந்தது. 1988/89 பெரும்போகத்தில் பயிர் செய்யப்பட்ட மொத்தப் பரப்பில் 92 சதவீதத்திற்கு வகைகூறிய நெற் பயிர்ச்செய்கையின் கீழான பரப்பு 1989 சிறுபோகத்தில் 81 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. 1989 இல் முறை ''பீ'', ''சீ'', ''ஜீ'' என்பவற்றில் நெல்லின் கீழான பரப்பு முறையே 47 சதவீத, 5 சதவீத, 7 சதவீத அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தவேளையில் முறை ''எச்'' இல் 32 சதவீத வீழ்ச்சியைக் காட்டியது. களப் பயிர்களின் கீழான பரப்பு 1989 ஆம் பயிர்ச்செய்கை ஆண்டில் 37 சதவீதத்தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தது.

1989 இல் மகாவலி அதிகாரப் பிரதேசத்தில் நெல் உற்பத்தி 266,108 மெற்றிக் தொன்களுக்கு 2 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்து நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் 13 சதவீதத்திற்கு வகைகூறியது. உற்பத்தியின் இந்த வீழ்ச்சிக்குச் சிறுபோகத்தின் குறைந்த நெல் உற்பத்தியே பெருமளவு காரணமாகிப் பெரும்போகத்தின் 4 சதவீத அதிகரிப்பை எதிரீடு செய்தது.

இவ்வாண்டில் முறை ''எச்'' இல் 12 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டு 1989 இறுதிவரை முறை ''எச்' இல் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 28,878இற்கு அதிகரிக்கப்பட்டது. 1989இல் முறை ''சீ'',யில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 1,089 ஆக விளங்கியதோடு 1989 இறுதிவரை முறை ''சி'' யில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 15,910 இற்குக் கொண்டுவரப்பட்டது. 1989 இறுதியில் முறை ''பி'' முறை ''ஜீ'', முறை ''எல்'' என்பனவற்றில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை முறையே 11,759 ஆகவும், 3,748 ஆகவும், 3,364 ஆகவும் காணப்பட்டன.

அட்டவணை 1.31

மகாவலி அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் குடியேற்றம்
('எச்,' 'கி,' 'பி,' 'ஜி,' 'எல்' முறைகள்)

(குடும்பங்களின் எண்ணிக்கை)

ஆண்டு	முறை					மொத்தம்
	'எச்'	'கி'	'பி'	'ஜி'	'எல்'	
1975	—	—	—	—	—	—
1976	2,393	—	—	—	—	2,393
1977	3,131	—	—	—	—	3,131
1978	2,754	—	—	—	—	2,754
1979	5,290	—	—	—	—	5,290
1980	7,407	—	—	—	—	7,407
1981	2,389	2,773	—	—	—	5,162
1982	1,449	2,683	1,918	—	—	6,050
1983	1,077	1,992	1,935	1,319	—	6,323
1984	1,956	1,988	1,355	446	—	5,745
1985	—9	824	3,439	1,045	—	5,299
1986	833	2,162	1,274	485	—	4,754
1987	182	1,404	863	79	—	2,528
1988 ..	14	995	620	234	3,270	5,133
1989 (அ) ..	12	1,089	355	140	94	1,690
மொத்தம் ..	28,878	15,910	11,759	3,748	3,364	63,659

(அ) தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மகாவலி அபிவிருத்தி மேலாண்மைச் சபை.

ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்தி

ஏனைய நீர்ப்பாசன அபிவிருத்திவேலையில் கிரிந்தி ஓயாச் செயற்றிட்டத்தின் கட்டுமான நடவடிக்கைகளை நிறைவுசெய்தல், ஏற்கெனவேயுள்ள முக்கிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் கிராமிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் புத்தாக்கம் செய்தல் போன்றவற்றினை நிறைவு செய்வதற்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டது. நீர்ப்பாசனத் திட்டங்களின் முகாமைத்துவத்தில் வேளாண்மையாளர்களின் அதிகளவிலான பற்கேற்புக்குக் கூடிய அழுத்தம் கொடுக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட முகாமைத்துவ முறையின் செயற்படுத்தலுடன் இந்த முயற்சி முழுமையாக்கப்பட்டது. 1989 இல் மூன்றும் தரத்திலான திட்டங்களின் தொழிற் பாட்டையும் பேணலையும் வேளாண்மையாளர் சங்கங்களுக்குக் கையளித்தல் ஆரம்பிக்கப்பட்டது. வேளாண்மையாளர் அமைப்புக்கள் சுறுசுறுப்பாகக் காணப்பட்ட சில நீர்ப்பாசனத் திட்டங்களின் மேம்படுத்தல், புத்தாக்கம் என்பன தொடர்பான சில விடயங்களும் ஒப்பந்த அடிப்படையில் வேளாண்மையாளர் அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டன.

1989 இல் நிலவிய குழப்ப நிலைமைகள் நீர்ப்பாசனத் திட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை முக்கியமாக நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டம், கிரித்தி ஓயா நீர்ப்பாசன குடியமர்வுச் செயற்றிட்டம், மினிப்பே—நாகதீப புத்தாக்கச் செயற்றிட்டம் என்பனவற்றின் நடவடிக்கைகளைத் தடைசெய்தன. 1989 இல் கிரித்திஓயா நீர்ப்பாசன குடியமர்வுச் செயற்றிட்டத்தின் கட்டம் 1 இன் கீழ் 88 எக்டேயர்களுக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்பட்டன. இச்செயற்றிட்டத்தின் 11 ஆம் கட்டத்தின் கீழ் இவ்வாண்டில் கிட்டத்தட்ட 615 எக்டேயர் நீர்ப்பாய்ச்சப்படக்கூடிய நிலங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. 1989 இல் இச்செயற்றிட்டத்தின் கட்டம் 1 இற்கான செலவு ரூ. 520 இலட்சமாக விளங்கியவேளையில் 11 ஆம் கட்டத்திற்கான செலவு ரூ. 850 இலட்சமாகக் காணப்பட்டது.

அட்டவணை 1.32

தேர்ந்தெடுக்கப்பட்ட முதன்மை நீர்ப்பாசனத் திட்டங்கள் மீதான செலவு

செயற்றிட்டம்	உதவியின் மூலங்கள்	மொத்த வெளிநாட்டு உதவியின் கடப்பாடு (பத்து இலட்சங்களில்)	1988இன் உண்மையான செலவு (ரூ.ப.இ.)	1988* இன செலவு (ரூ.ப. இ.)	1989* இறுதி வரை ஒன்று சேர்ந்த செலவு (ரூ.ப.இ.)
1. கிருண்டி ஓயா நீர்ப்பாசன குடியமர்த்தல் செயற்றிட்டம் (கே.ஒ.ஐ.எஸ்.பி.) கட்டம் I	ஆ.அ.வ. கே.எப்.டபிள்யூ. வே.அ.ப.நி. வே.அ.ப.நி.	30.0 (ஐ.அ. டொலர்) 43.5 (டி. மா.) 5.5 (தி.எ.உ) 12.0 (ஐ.அ. டொலர்)	103.6	52.3	1,682.1
2. கிருண்டி ஓயா நீர்ப்பாசன குடியமர்த்தல் செயற்றிட்டம் (கே.ஒ.ஐ.எஸ்.பி.) கட்டம் II	ஆ.அ.வ	26.6 (ஐ.அ.டொ)	69.7	85.1	196.8
3. இங்கினியிட்டிய நீர்த்தேக்க செயற்றிட்டம் ...	வெ.பொ.சூ.நி. யப்பான்	1,800 (யென்)	12	—	345.2
4. கிராமிய நீர்ப்பாசன புனர்வாழ்வு செயற்றிட்டம் ...	ப.அ.அ.	24.5 (தி.எ.உ.)	76.4	73.4	809.8
5. நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத்திட்டம் சட்டம் II	பிரான்சு	200 (பி.பிராங்)	416.4	80.6	1,034.5

மூலம்: நீர்ப்பாசனத் திணைக்களம்

* தற்காலிகம்.

நில்வளகங்கை வெள்ளப் பாதுகாப்புத் திட்டம் 11 ஆம் கட்டவேலைகள் 1989 இல் நிறைவு பெற்றன. 1989 இல் இச்செயற்றிட்டத்தின் மீதான செலவு ரூ. 810 இலட்சமாக விளங்கியது.

வெளிநாட்டு வளங்களினால் நிதியிடப்பட்ட பல நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டங்களின் செயற்படுத்தல் 1989 இல் தொடர்ந்தது. இவற்றில் கிராமிய நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டம் (பன்னாட்டு அபிவிருத்திச் சங்கம்) முக்கிய நீர்ப்பாசனப் புத்தாக்கச் செயற்றிட்டம் (பன்னாட்டு அபிவிருத்திச் சங்கம்), நீர்ப்பாசனத் திட்ட முகாமைத்துவச் செயற்றிட்டம் (பன்னாட்டுஅபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் முகவராண்மை நிலையம்), மினிப்பே—நாகதீப புத்தாக்கச் செயற்றிட்டம் (யப்பானிய அரசு) என்பன அடங்கியிருந்தன.

போக்குவரத்து இடர்களையும், கட்டடப் பொருட்களின் தட்டுப்பாட்டையும் ஏற்படுத்திய உள்நாட்டுக் குழப்பங்கள் காரணமாக மொனராகலை, பதுளை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் கிராமிய நீர்ப்பாசன புத்தாக்கச் செயற்றிட்டத்தின் கீழான கட்டுமான வேலைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எனினும் 1989 இல் 70 திட்டங்கள் நிறைவு பெற்றன. 1989 இல் இத்திட்டத்தின் மீதான செலவு ரூ. 730 இலட்சமாக விளங்கியது.

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

மத்திய மட்டத்திலான வலுவான ஒருங்கிணைப்புடன் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பன்முகப்படுத்துவதன்மூலம் கிராமியப் பிரதேசங்களையும் கிராமிய மக்களின் நிலைமையையும் மேம்படுத்துவதே ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய நோக்கமாகக் காணப்பட்டது.

1988 இறுதியில் 14 மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 1989 இறுதியளவில் கம்பகா மாவட்டத்திற்கும் நீடிக்கப்பட்டது. கம்பகா மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் ஓராண்டு செயற்றிட்டக் காலத்தைக் கொண்டிருந்தது. கம்பகா மாவட்ட ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு ரூ. 2,520 இலட்சங்களாக அமைந்ததுடன் இது யப்பானிய அரசினால் நிதியிடப்பட்டுள்ளது. பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், நீர்ப்பாசன வசதிகள் என்பவற்றிற்கு இச்செயற்றிட்டம் முன்னுரிமை வழங்குகின்றது. இவ்வாண்டில் திருகோணமலை, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அநுராதபுரம், காலி ஆகிய மாவட்டங்களுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் தொடக்க தயார்படுத்தும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1988 இன் ரூ. 4,050 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 3,050 இலட்சமாக விளங்கியது. 1989 இறுதி வரையில் எல்லாச் செயற்றிட்டங்கள் மீதுமான திரண்ட செலவு 1988 இல் ஏற்பட்ட செலவுடன் அட்டவணை 1.33 இல் காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான குழப்ப நிலைமைகளின் காரணமாக மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திநிகழ்ச்சித் திட்டங்களின் நடைமுறைப்படுத்தல் 1989 இலும் இடைநிறுத்தப்பட்டிருந்தது. 1989 இல் சாதகமற்ற வானிலைத் தன்மைகள் காரணமாகவும் குழப்ப நிலைமை அதிகரித்தமையின் காரணமாகவும் ஏனைய செயற்றிட்டங்கள் முக்கியமாக அம்பாந்தோட்டை, நுவரெலியா, மாத்தளை, புத்தளம், மொனராகலை ஆகிய மாவட்டங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களின் செயலாற்றம் பின்னடைவினைக் கொண்டிருந்தது. உள்நாட்டுக் குழப்பங்கள், வேலைத் தடங்கல்கள், போக்குவரத்து இடர்ப்பாடுகள், கட்டடப் பொருட்களின் பற்றுக்குறை என்பனவற்றை ஏற்படுத்துவது மட்டுமன்றி செயற்றிட்ட அலுவலர்களின் கண்காணிப்பு நடவடிக்கைகளையும் ஒப்பந்த நடவடிக்கைகளில் ஒப்பந்தகாரர்களின் பங்களிப்பினையும் கடுமையாகப் பாதித்தன.

அட்டவணை 1.33

ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் மீதான மாவட்ட ரீதியான செலவு 1988–1989

பத்து இலட்சம் ரூபாய்களில்

மாவட்டம் (அ)		வெளிநாட்டு உதவி மூலங்கள்	மதிப்பிடப்பட்ட செலவு			இது காலவரைக்கும் ஒன்று சேர்ந்த செலவு		செலவு	
			வெளிநாட்டு உதவிக் கடப்பாடுகள்	உள்நாடு	மொத்தம்	1988 முடிவில் உள்ளபடி	1989 முடிவில் உள்ளபடி (ஆ)	1988-ஆம் ஆண்டின் செலவு	1989-ஆம் ஆண்டின் செலவு (ஆ)
1. மாத்தறை	(1979) ...	சீடா (சுவீடன)	338	37	375	175	197	22	22(இ)
2. அம்பாந்தோட்டை	(1979) ...	நொராட்(நோர்வே)	671	13	684	447	492	63	45
3. நுவரெலியா	(1980) ...	நெதர்லாந்து	510	10	520	287	310	42	23
4. மாத்தளை	(1981) ...	உலக வங்கி	307	145	452	385	403	31	18
5. புத்தளம்	(1981) ...	உலக வங்கி	397	187	584	545	569	53	24
6. பதுளை	(1981) ...	வே. அ. ப. நி.	500	110	610	277	301	23	24
7. வவுனியா	(1984) ...	உலக வங்கி	246	133	379	64	64	0.1	—
8. மன்னார்	(1984) ...	உலக வங்கி	220	118	338	55	56	0.1	0.3
9. இரத்தினபுரி	(1984) ...	நெதர்லாந்து	209	4	213	125	144	26	19
10. மொனராகலை	(1984) ...	நொராட்	413	8	421	145	180	46	34
11. முல்லைத்தீவு	(1985) ...	நெதர்லாந்து	90	2	92	5	6	0.1	0.8
12. கேகாலை	(1986) ...	வே. அ. ப. நி.	262	147	409	72	104	37	32
13. களுத்துறை	(1987) ...	பின்லாந்து ப.அ.உ.	224	38	262	64	120	57	56
14. கண்டி	(1987) ...	சே. கூ. குடியரசு	32	3	35	11	16	4	5
15. அம்பாறை	(1989) ...	ஐப்பான்	250	2	252	—	0.5	—	0.5

(அ) நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு அடைப்புக் குறிக்குள் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) தற்காலிகமானவை

(இ) திசெம்பரில் ஏற்பட்ட செலவை உள்ளடக்கவில்லை.

மூலம்: திட்ட நடைமுறைப்படுத்தல் அமைச்சு.